பத்தில் ஒருவனாக இருப்பதைவிட
பத்தில் முதல்வனாய் இரு....!

# நறுமலர் தீபம்-இணையவழி

## முதுகலைத் தமிழ் பயிற்சியகம்

**தருமபுரி மாவட்டம் - 8122190917**

**(UG, PG - TRB, COLLEGE TRB, NET, SET –TAMIL)**

<u>இணையவழி வகுப்புகள்</u>

## (ONLINE CLASS- 7.00 – 10.30 P.M) &

## இணையவழித் தேர்வு நடைபெற்று வருகிறது

## YOUTUBE ID : Narumalar Deepam

Narumalar Deepam Academy-8122190917

நறுமலர் தீபம் பயிற்சியகத்தின் சாதனைகள்

- **UG TRB TMIL –** தேர்ச்சிபெற்றவர்கள் - 29 பேர்
- **PG TRB TMIL –** தேர்ச்சிபெற்றவர்கள் - 87 பேர்
- **UGC NET TMIL –** தேர்ச்சிபெற்றவர்கள் - 180 பேர்
- **UGC NET JRF TMIL –** தேர்ச்சிபெற்றவர்கள் - 26 பேர்

# மொழி வரலாறு

- பேச்சாலும் எழுத்தாலும் மனிதன் தனது கருத்தை பிறருக்கு தெருவிக்கும் கருவி – மொழி
- மனிதன் வாழ்ந்ததும் வாழப்போவதும் மொழியால் தான்.
- மக்கள் வாழ்வில் பிறந்து மக்களால் வளர்க்கப்பட்டு மக்களின் வாழ்வை நாகரிக மொழிகளாக உயர்த்தி வரும் அரிய கலை மொழியே.
- ஆறுஅறிவு பெற்ற மனித சமுதாயத்தையும் ஐயறிவு கொண்ட விலங்குகளையும் வேறுபடுத்துவது மொழி.
- மொழி இல்லாவிட்டால் மனித நாகரிகமே இல்லை.
- ஒரு மொழியின் அமைப்பை விளக்குவதே அம் மொழியின் இலக்கணம் ஆகும்.
- மொழி மொழியால் விளக்கப்படுவதை இலக்கணம் என்பர். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தமிழ் மொழிக்கு தொல்காப்பியர் நல்லதோர் இலக்கணம் படைத்துள்ளார்.
- மரபு வழி இலக்கணத்தார் தாய்மொழிக்கு தான் இலக்கணம் எழுதினார்.
- பாணினி வடமொழிக்கும் தொல்காப்பியர் தமிழ் மொழிக்கும் இலக்ணம் எழுதினர். மரபு வழி இலக்கணங்கள் அந்தந்த மொழிகள் பேசும் மக்கள் சமூதாயத்திற்காக எழுதப்பட்டன.
- ஆர்டன், போப், பெஸ்கி போன்றோர் தமிழ் மொழியை ஐரோப்பியர் கற்பதற்காக எழுதினார்கள். இவர்களது தாய்மொழி வேறு இவர்கள் கற்ற இரண்டாவது மொழிக்கு இலக்கணம் எழுதினார்.
- மொழியியலாளர் மொழியியல் கொள்கைகளை அடிப்படையாக வைத்து, தங்களுக்கு தெரியாத மொழிகளுக்கு எல்லாம் இலக்கணங்களை படைத்தனர். - போவாஸ், சபீர் போன்றவர்கள் இப்பிரிவை சார்ந்தவர்.
- ஒரு மொழியின் இயல்புகளை வரையறுத்து விதிமுகத்தான் உணர்த்துவது இலக்கணம்.
- மொழியின் இயல்புகளை உள்ளவாறு விளக்கி உரைப்பது - மொழியியல்
- மொழியின் செயல்பாட்டை விளக்குவது மொழியியல்.
- எழுத்து மொழியே இலக்கண ஆய்வு பொருளாகின்றது.
- மொழியியல் பழங்குடி மக்களின் பேச்சு மொழியையும், கிளைமொழியையும் ஆராய்கின்றது.
- இலக்கணம் பெரும்பாலும் சொல்லியலை அடிப்படையாக கொண்டது.
- மரபுவழி இலக்கணத்தாரும் மொழியியலாளரும் கோட்பாட்டிலும் அணுகுமுறையிலும், வேறுபட்டு இருப்பினும், அவர்கள் மொழியின் அமைப்பினை ஆராய்ந்து விளக்கி சென்றுள்ளனர் என்பது இங்கு குறிப்பிடதக்கது.
- மொழி அமைப்பை ஒலியனியல், உருபனியல், தொடரியல் என்ற தலைப்பின் கீழ் ஆராய்தல்.
- பொதுவாக ஒலியியல் பேச்சொலிகளின் பிறப்பிடம், எண்ணிக்கை, மொழிகளில் அமைந்துள்ள முறை ஆகியவை பற்றி ஆராயபடுகின்றன.
- ஒலியியல் ஆராய்ச்சியை பொது ஒலியியல் என்றும், சிறப்பு ஒலியியல் (அ) மொழியின் ஒலியில் என்றும் இருவகையாக பகுப்பர்.

Narumalar Deepam Academy-8122190917

❖ ஒரு குறிப்பிட்ட மொழியின் ஒலியியலின் அந்த மொழியின் ஒலிகளின் எண்ணிக்கை, அவற்றின் பாகுபாடு அவற்றிடையே காணப்படும் அமைப்பு, பொது தன்மை ஆகியவை பற்றி விளக்குகிறது.

ஒலியை ஆராயும் முறைகள்

1. கேட்பு ஒலியியல்
2. உச்சரிப்பு ஒலியியல்
3. பௌதிக ஒலியியல்

1. கேட்பு ஒலியியல்:-

- இது மனிதன் கேட்கும் தன்மையை அடிப்படையாக கொண்டு ஆராய்வதாகும். இது சிறந்த முறையாக கருதப்படுவது இல்லை.

2. உச்சரிப்பு ஒலியியல்:-

- ஒலியுருப்புகளை அடிப்படையாக கொண்டு ஒலியின் பிறப்பை ஆராய்வதாகும். நமது மரபுவழி இலக்கண ஆசிரியர்கள் இம் முறையிலேயே தமிழ் ஒலிகளின் பிறப்பை விளக்கியுள்ளனர்.

3. பௌதிக ஒலியியல்:-

- பேச்சொலியின் பௌதிக தன்மையை ஆராய்தல், ஒலி அலைகளாக வருவதை அளந்து கணக்கிடுவர்.
- ஒலிப்பு முறையை அடிப்படையாக கொண்டு பேச்சொலிகளை உயிர், மெய் என இரண்டாக பிரிப்பர். பேச்சொலிக்குரிய காற்று வாயரையில் தடுக்கப்பட்டால் மெய்யொளிகளும், தடுக்கப்படா விட்டால் உயிரொலிகளும் பிறக்கும்.
- உயிர் ஒலிகளின் பிறப்பை விளக்குவதற்கு மூன்று முறைகள் பயன்படுத்தப்படுகின்றன.
    1. இயங்கும் ஒலிப்படானாக செயல்படும் நாக்கின் பகுதி
    2. நாக்கு அண்ணத்தை நோக்கி எழுகின்ற உயரத்தின் அளவு
    3. இதழ் அமைப்பு

❖ அண்ணத்தை நோக்கி எழுகின்ற நாக்கின் பகுதியை ஒட்டி உயிரொலிகளை *முன் உயிர்கள், நடு உயிர்கள், பின் உயிர்கள் என* வகைப்படுத்துவர்.

❖ நாக்கு அண்ணத்தை நோக்கி உயருகின்ற உயரத்தை ஒட்டி மேல், இடை, கீழ் என்ற மூன்று பெரும் பிரிவாகவும் மேலை, மேல், கீழ்மேல், எனவும், இடையை மேல்இடை, நடுஇடை, கீழ்இடை எனவும் கீழை, மேல்கீழ், கீழ் எனவும் பிரிப்பர்.

❖ இதல்களின் அமைப்பை ஒட்டி இதழ் குவி உயிர்கள் இதழ் குவியா உயிர்கள் என பிரிப்பர்.

❖ ஒலியுறுப்புகள் அதிர்ந்தோ, காற்றை அடைத்தோ, வெளிவரும் காற்றை அதிரச்செய்தோ பிறக்கும் ஒலிகள் மெய்யொலிகளாகும்.

❖ மெய்யொலிகளின் பிறப்பு முயற்சியையும் பிற்பிடத்தையும் ஒலிப்பு முறையும் கொண்டு அடைப்பொலிகள் (அ) வெடிப்பொலிகள், உரசொலிகள், மூக்கொலிகள், மருங்கொலிகள், ஆடொலிகள், அரையுயிர்கள் என வகைப்படுத்தலாம்.

Narumalar Deepam Academy-8122190917

- வாயரையின் ஓர் இடத்தில் மூச்சுக் காற்று ஒலிப்பானால் முழுதும் தடை செய்யப்பட்டு திடிரெண்று வெடிப்போடு வெளியேரினால் அதனை வெடிப்பொலி (அ) தடையொலி என்பர். அப்பொழுது அண்ணக்கடை அடைப்பு ஏற்படும்.
- தமிழில் வல்லின ஒலிகளை வெடிப்பொலி என்பர்.
- அடைப்பொலி போலவே அமைந்து அண்ணக்கடை திறந்து மூக்கறை வழியே மூச்சுக் காற்று வெளியே செல்லும் போது மூக்கொலி (அ) மெல்லினம் தோன்றும்.
- வாயறையில் மூச்சு காற்று வரும் போது முழுவதும் தடுக்காமல் மூச்சு வெளியேறும் பாதையை ஒலிப்பானால் குறுக்கி அந்த இடுக்கியின் வழியே செலுத்தினால் உராயும் தன்மை ஏற்படுகிறது. இப்படி உராயும் தன்மையோடு பிறக்கும் ஒலிகளே உரசொலிகள் எனப்படும்.
- மூச்சுக்காற்று வாயரையில் ஓர் இடத்தை அடைத்து நாக்கின் இரண்டு பக்கத்தில் (மருங்கிலும்) வெளிவந்தால் அது *மருங்கொளி* எனப்படும்.
- நாக்கின் நுனி மேலே எழுந்து உள்நோக்கி விளைந்து பின் வேகமாக கீழே வரும் போது அண்ணத்தில் மோதுவதால் எழுகிற ஒலியே வருடொலியாகும் (ர).
- மூச்சுக்காற்று வெளியேறும் போது இதல்களோ நுனி நாக்கோ, உள்நாக்கோ, வேகமாக அதிர்ந்து ஆடும்படி அமையும் ஒலியே ஆடொலியாகும்.
- கீழ்கண்ட இரு சொற்களின் வேறபாட்டிற் ஒலி வேறுபாடு காரணமாகும்.
- அடு >சுமை, ஆடு > நடனம் செய்
- இவ்வாறு சொல் வேறுபாட்டிற்கு காரணமாய் அமைந்த மிக குறைந்த ஒலி வேறுபாட்டையே ஒலியன் என்கிறோம்.
- தமிழில் 'த'' கரம் சூழலுக்கு ஏற்ப ஒலி மாறுபடுகிறது.

  கடல் - **Katal**

  பக்கம் - **Pakkam**

  பகல் - **Phal**

  தங்கம் - **Tangam**

- கடல், பக்கம் ஆகிய சொற்களில் உள்ள 'க''கரம் **K** போல ஒலிக்கின்றது.
- பகல் என்ற சொல்லில் 'ககரம்'' **h** போல ஒலிக்கிறது.
- இவ்வொலி மாற்றம் சூழல் மாற்றத்தை காட்டுகிறது.
- மொழி முதலிலும் இரட்டித்தவிடத்தும் **K** போல ஒலிக்கின்றது.
- இரண்டு உயிர்களுக்கு இடையே **'h''** போன்று ஒலிக்கிறது.
- மெல்லெழுத்தை அடுத்து வரும் போது **'g''** போன்று ஒலிக்கிறது.
- சொல் வேறுபாட்டிற்கு காரணமாய் அமைந்த ககர ஒலியின் சூழமுக்கு ஏற்ப மாறுபடும்.
- 3 வடிவங்களை கொண்டுள்ளது. அவற்றை 'ககர ஒலிகளின் மாற்றொலி என்பர்.
- ஒலியனியல் ஆய்வில் பல ஆய்வுமுறை கொள்கைகள் பயன்படுத்தப்படுகின்றன. அவை வேற்றுநிலை வழக்கு, துணைநிலை வழக்கு, உறழ்ச்சி போன்றவையாகும்.

Narumalar Deepam Academy-8122190917

# சங்க இலக்கியம் [கி.மு. 500 - கி.பி. 200]

## சங்கம்

- மூன்று சங்கங்கள் வைத்து முத்தமிழை வளர்த்தவர்கள் - பாண்டிய மன்னாகள்.
- 'இறையனார்' என்பவர் அகப்பொருள் பற்றிய செய்திகளை 60 நூற்பாக்களைக் கொண்டு எழுதினார். இந்நூல், பிற்காலத்தில் 'இறையனார் களவியல்' என வழங்கப்பட்டது.
- முதல், இடை, கடைச் சங்கங்கள் பற்றிய குறிப்புகளை நூல் முதன் முதலில் வெளிப்படுத்துகின்றது.
- இறையனார் களவியலுக்கு உரை வகுத்தவர் - நக்கீரர்.
- கி.பி. 7-ம் நூற்றாண்டில் முசிறியில் வாழ்ந்த 'நீலகண்டன்' என்பவர் முதன்முதலில் 'இறையனார் களவியல் உரைக்கு' எழுத்து வடிவம் தந்தார்.
- இந்நூல் வாய்வழியாக 10 (அ) 9 தலைமுறைகள் வாய்மொழியாகவே வழங்கி வந்தது.
- மூவேந்தரும் தமிழ் வளர்த்தனர் என்றாலும் சங்கம் வைத்து தமிழ் வளர்த்த பெருமை பாண்டியருக்கே உரியது.
- 'சங்கம்' என்ற சொல்லை முதன் முதலில் பயன்படுத்தியவர் - மணிமேகலையில் → சீத்தலைச்சாத்தனார். ("புலம்புரி சங்கம் பொருளொடு முழங்க")
- 'சங்கம்' பற்றிய குறிப்பை முதன் முதலில் கி.பி. 7-ம் நூற்றாண்டைச் சார்ந்த அப்பர் தேவாரத்தில் காணப்படுகின்றது.

  'நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கம் ஏறி
  நற்கனகக் கிழி தருமிக்கு அருளினோன் காண்' - [திருப்புத்தூர் திருத்தாண்டகம் - 3]

- இந்தியாவில் பேச்சுவழக்கில் உள்ள மொழிகளின் இலக்கியங்கள் மிகப் பழமையானவை 'சங்க இலக்கியங்கள்' ஆகும்.
- தமிழில் செவ்வியல் இலக்கியம் உயர்தனி இலக்கியம் என்ற சிறப்புக்குரிய இலக்கியம் 'சங்க இலக்கியங்கள்'.
- சங்க இலக்கியத்திற்கு 'பதினெண் மேற்கணக்கு" என்ற பெயரும் உண்டு.
- 'கீழ்கணக்கு' வாழ்க்கையின் சாரம்சத்தைச் சுருக்கமாய் சுட்டி நீதிகளைக் கூறுவது.
- 'மேற்கணக்கு' என்பது வாழ்வியலை விரித்துக் கூறுவதன் மூலம் நீதிகளைக் கூறுவது.
- 'சங்க இலக்கியங்கள்' எனப்படுபவை எட்டுத்தொகையும் (8), பத்துப்பாட்டும் (10) ஆகும்.
- 'தொகை' என்பது பல புலவலர்கள் பாடிய பாடல்களைக் கொண்ட நூல்.
- 'பாட்டு' என்பது தனி ஒரு புலவர் பாடிய நூல்.

Narumalar Deepam Academy-8122190917

- இறையனார் களவியல் உரை வெளிப்படுத்தும் குறிப்புகளின் அடிப்படையில் அடியார்க்குநல்லார் தாம் எழுதிய சிலப்பதிகார உரையிலும்,
- பாண்டிய நாட்டு செவ்வூர்ச் சிற்றம்பலக் கவிராயர் ஏட்டுச் சுவடியிலும், முச்சங்கங்கள் பற்றிய செய்திகள் கூறப்பட்டுள்ளன.

முச்சங்கங்கள் பற்றிய பல்வேறு கருத்துக்கள்:

- அகப்பொருள் உரை கூறும் அம்முச்சங்கங்களைப் பற்றி மூவகை கருத்துக்கள் நிலவுகின்றன.

முச்சங்கங்கள் முழு பொய்:

- தமிழகத்தில் 'சங்கம்' என்ற ஒன்றே இருந்திருக்க முடியாது என மறுத்தவர்கள்.
  - கே.என் சிவராஜபிள்ளை
  - பி.டி. சீனிவாசஜயங்கார்
  - கா. நமச்சிவாயமுதலியார்
  - கோ. கேசவன்
  - முத்தையா
- 'சங்கம்' என்ற சொல்லே தமிழ்ச்சொல் அன்று சொல்லே தமிழில் இல்லை என்றால் சங்கம் இருந்திருக்க முடியுமா? அன்றியும்,

'க த ந ப ம எனும் ஆவைந் தெழுத்தும்
எல்லா உயிரொடும் செல்லுமார் முதலே'. - (தொல். 61)

'சகரக் கிளவியும் அவற்றோ ரற்றே
ஆ ஐ ஔ எனும் மூன்றலங் கடையே' - (தொல். 62)

- என்னும் தொல்காப்பிய நூற்பாக்களின்படி 'சகரம்' மொழிக்கு முதலில் வராது. ஆதலின் 'சங்கம்' வடசொல் என்கின்றனர்.

- முதற்சங்கத்தில் சிவபெருமான், முருகவேள், குபேரன் ஆகிய கடவுள்கள் நேரில் வந்திருந்து சங்கம் ஆய்ந்தனர் எனக் கூறுவதே "முச்சங்கம் முழுபொய்" என்பதற்குச் சான்றாக அமைகிறது.
  - திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுள் → சிவன்
  - குன்றம் எறிந்த முருகவேள் → முருகன்
  - நிதியின் கிழவன் → குபேரன்
  - துவரைக் கோமான் → கண்ணன் (திருமால்)
  - ஆலவாய் பெருமான் → சிவன்
- முதற்சங்கத்தில் முதல் இலக்கண நூலாக "அகத்தியம்" மட்டுமே கூறப்படுகிறது.
- "இலக்கியம் கண்டதற்குதான் இலக்கணம் இயம்ப இயலும்" அவ்வாறாயின் அகத்தியர்க்கு முன்னர் இருந்த எந்த இலக்கியங்களுமே குறிக்கப்படவில்லை.


Narumalar Deepam Academy-8122190917

- மணிமேகலையில் "புலம்புரி சங்கம் பொருளொடு முழங்க" என்ற அடியில் 'சங்கம்' என்ற சொல் குறிக்கப்படுகின்றது.
- சங்கம் என்ற அமைப்பைக் குறிக்க புணர், கூட்டு, அவை, குழு, தமிழ்நிலை என்ற சொற்கள் தமிழ் இலக்கியங்களில் காணப்படுகின்றன.

கடைச்சங்கம் மட்டும் உண்மை:

- முதற்சங்கம், இடைச்சங்கம் என்பன இருந்ததற்கு நம்பத் தகுந்த சான்றுகள் இல்லை.
- தமிழ்ச்சங்கம் என்ற ஒன்று மட்டும் இருந்திருக்கலாம் என்ற கருதினை,
  - **K.A.** நீலகண்ட சாஸ்திரியார்,
  - **T.R.** ஷேஷகிரி சாஸ்திரியார்,
  - **V.R.** இராமச்சந்திர தீட்சிதர்,
  - **S.** வையாபுரிப்பிள்ளை - முதலானோர் எடுத்துரைப்பதற்கானச் சான்றுகள் கீழே தரப்பட்டுள்ளன.
- தொல்காப்பியம் தவிர முதல், இடை, கடைச்சங்க நூல்கள் எதுவும் இல்லை. எனவே ஒரு சங்கம் மட்டும்தான் இருந்திருக்க முடியும்.
- முதல், இடை என்னும் இரு சங்கங்களுக்கும் அகத்தியரே முதன்மைப் புலவர் என 'இறையனார் களவியலுரை' கூறுகிறது.
- முதல் இரு சங்கங்களும் 4449 - 3700 = 8149 ஆண்டுகள் இருந்தன என்று கூறப்படுகின்றது. 8149 ஆண்டுகள் அகத்தியர் உயிருடன் இருந்தார் என்பது நம்பத்தகுந்ததாக இல்லை.
- வெவ்வேறு காலங்களில் வாழ்ந்த புலவர்களின் சிறப்பு கருதி ஒரே காலச்சூழலில் வாழ்ந்ததாகக் கூறுவது வடமொழி வழக்கு.
- தமிழிலும் கடைச்சங்க புறநானூற்று புலவர் முரஞ்சியூர் முடிநாகராயர் முதற்சங்கப் புலவரென குறிக்கப்படுகின்றார்.
- நற்றிணை கடைச்சங்க நூல்களில் ஒன்று, பாண்டியன் முடத்திருமாறன் பாடிய பாடல் நற்றிணையில் உள்ளது. கடைச் சங்கத்தைச் சார்ந்த முடத்திருமாறன் இடைச்சங்கத்துப் புலவரென கூறப்படுகின்றது.
- இவ்வாறு சங்கம் என்ற அமைப்பின்கீழ் புலவர்கள் தமிழ் ஆய்ந்தனர் என்பதனை மறுக்க இயலாது. எனவே ஒரு சங்கம் இருந்தது எனக்கொள்வது பொருத்தமுடையதாக இருக்கும் என்ற கருத்தும் உண்டு.

முச்சங்கங்களும் முழு உண்மையே:

- முதல், இடை, கடைச் சங்கங்கள் இருந்தன என்பதை,

# பக்தி இலக்கியம் - (600 – 900)

- பல்லவர் காலம் - (கி.பி. 600 – 850 மு.வ.)
- தமிழை 'பக்தியின் மொழி' என்றும் 'பத்திமை மொழி' என்று கூறியவர் - 'தனிநாயக அடிகள்'
- தமிழை பக்தியின் மொழி என்றும்,

  ஆங்கிலம் - வணிகத்தின் மொழி

  இலத்தீன் - சட்டத்தின் மொழி

  கிரேக்கம் - இசையின் மொழி

  ஜெர்மன் - தத்துவத்தின் மொழி

  பிரெஞ்சு - தூதின் மொழி

  இத்தாலி - காதலின் மொழி - தனிநாயக அடிகள்

பன்னிரு திருமுறைகள் - (சைவ நூல்)

- தமிழைப் பக்திமொழி (இரக்கத்தின் மொழி) என்று கூறியவர் தனிநாயகம் அடிகளார்.
- சமய மறுமலர்ச்சிக் காலம், பக்தி இயக்கக் காலம் - பல்லவர் காலம்
- சைவப் பெரியோர்கள் பாடிய பாக்கள் திருமுறைகள் எனப்படும்.
- திருமுறைகளைத் தொகுத்தவர் நம்பியாண்டார் நம்பி
- நம்பியாண்டார் நம்பி தொகுத்தவை 11 திருமுறைகள் மட்டுமே
- நம்பியாண்டார் நம்பிக்குப்பின் சேர்த்தது பெரியபுராணம்
- பன்னிரு திருமுறைகள் தொகுத்தவன் முதலாம் இராசராசன் ஆவார்.
- இவர் "திருமுறை கண்ட சோழன்" என அழைக்கப்படுகிறான்
- முதல் ஏழு திருமுறைகள் தேவாரம் எனப்படுகிறது.
- தேவாரப் பாக்கள் "பழம் மரபிசைக் களஞ்சியம்" எனப்படுகிறது.
- தேவாரம் என்பதை "தே+வாரம்" எனப் பிரித்து கடவுளுக்கு உரிய பாடல்கள் என்றும், "தே+ஆரம்" எனப் பிரித்து கடவுளுக்கு சூட்டப்படும் பா மாலை என்றும் பொருள் கொள்வர்.
- முதல் ஏழு திருமுறைகளுக்கு "மூவர் தமிழ்" என்ற பெயரும் உண்டு.
- மூவர் முதலிகள் - திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர்
- சைவசமய குரவர்கள் - திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர்
- சைவ சமய குரவர்கள் நால்வர் பாடியதை "சைவ நான்மறைகள்" என்று புகழப்படும்.
- திருமுறைகளைப் பாடியவர்கள் மொத்தம் 27 பேர்
- "இவ்வளவு பழமையான இசைச் செல்வம் உலகில் வேறு எங்கும் இந்த அளவிற்கு கிடைக்கவில்லை" என்பார் மு.வரதராசனார்.

Narumalar Deepam Academy-8122190917

- 1 முதல் 9 திருமுறைகள் எவ்வாறு அழைக்கப்படுகின்றன - தோத்திரங்கள்
- 10 ஆம் திருமுறை எவ்வாறு அழைக்கப்படுகின்றன - சாத்திரம்
- 11 ஆம் திருமுறை எவ்வாறு அழைக்கப்படுகின்றன - பிரபந்தம் (சிவ நூல்கள்)
- 12 ஆம் திருமுறை எவ்வாறு அழைக்கப்படுகின்றன - புராணம்
- பன்னிரு திருமுறைகளுள் இசைப்பாக்களால் (இசை தமிழ்) ஆனாவை எத்தனை - முதல் ஒன்பது திருமுறைகள் (8 ஆம் திருமுறை மட்டும் இயற்பா வகை)

✓ பன்னிரு திருமுறைகளுள் 10, 11, 12 எவ்வகை பாக்களால் ஆனவை - இயற்பா (இயற்றமிழ்)

- 1,2,3 – திருஞான சம்பந்தர்
- 4,5,6 – திருநாவுக்கரசர்
- 7 - சுந்தார் } - மூவர் முதலிகள் / முதல் மூவர் சைவக்குரவர்கள்
- 8 – மாணிக்கவாசகர் - திருவாசகம், திருக்கோவை
- 9 – 9 பேர் (திருமாளிகைதேவர் முதலானோர்)
- 10 – திருமந்திரம் - திருமூலர்
- 11 – 12 பேர் (12) (காரைக்காலமையார், நக்கீரர்)
- 12 – சேக்கிழார் - பெரிய புராணம்
- பன்னிரு திருமுறைகளை தொகுத்தவர் - நம்பியாண்டார்நம்பி
- பன்னிரு திருமுறைகளை தொகுப்பித்தவர் - இராஜராஜசோழன்
- 'வாரம்' என்பது – 'இசைப்பாட்டு' என சிலப்பதிகாரம் அரங்கேற்றுக்காதையில் வருகிறது.
- 12 – திருமுறைகளை 'சைவ நூல்' என்பர்
- ஆழ்வார்பாடல்கள் 'நாலாயிர திவ்விய பிரபந்தம்' – 'வைணவர்கள்'
- 11 திருமுறைகளை இராஜராஜ சோழனின் வேண்டுகோளுக்கு இணங்க நம்பியாண்டார் நம்பி அவர்களால் தொடுப்பட்டது.

Narumalar Deepam Academy-8122190917

## பன்னிரு திருமுறைகள் பட்டியல்

| திருமுறை | ஆசிரியர் | நூல்கள் | பாடல்கள் |
|---|---|---|---|
| 1,2,3 | திருஞானசம்பந்தர் | தேவாரம் (385 பதிகம்) | 1213 |
| 4,5,6 | திருநாவுக்கரசர் | தேவாரம் (32 பதிகம்) | 3066 |
| 7 | சுந்தரர் | தேவாரம் ( 100 பதிகம்) | 1026 |
| 8 | மாணிக்கவாசகர் | திருவாசகம், திருக்கோவையார் | 1056 |
| 9 | 1. திருமாளிகைத்தேவர் | சிதம்பர மகேந்திர மாலை பற்றி மூன்று பதிகம், புறச் சமயங்கள் பற்றி ஒரு பதிகம் | 45 |
| | 2. கருவூத் தேவர் | 10 பதிகங்கள் | 105 |
| | 3. சேந்தனார் | 2 பதிகங்கள் | 47 |
| | 4. பூந்துருத்தி காடவா நம்பி | 1 பதிகங்கள் | 12 |
| | 5. கண்டராதித்தர் | 1 பதிகங்கள் | 10 |
| | 6. வேணாத்டடிகள் | 1 பதிகங்கள் | 10 |
| | 7. திருவாலியமுதனார் | 4 பதிகங்கள் | 42 |
| | 8. புருடோத்தமா நம்பி | 2 பதிகங்கள் | 22 |
| | 9. சேதிராயர் | 1 பதிகங்கள் | 10 |
| 10 | திருமூலர் | திருமந்திரம் | 3000 |
| 11 | 1.திருவாலவுடையார் | திருமுகப்பாசுரம் | |
| | 2.காரைக்கால் அம்மையார் | 1.திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் | 11 |
| | | 2.அற்புதத் திருவந்தாதி | 10 |
| | | 3.திருவிரட்டை மணிமாலை | 20 |
| | 3.ஐயடிகள் காடவர்கோன் | ஷேத்திரத் திருவெண்பா | 24 |
| | 4.சேரமான் பெருமாள் நாயனார் | 1.பொன்வண்ணத் தந்தாதி | 100 |
| | | 2.திருவாரூர் மும்மணிக்கோவை | 30 |
| | | 3.திருக்கயிலாய ஞானவுலா | 1 |
| | 5.நக்கீரத் தேவர் | 1.கயிலைபாதி காளத்திபாதி | 100 |
| | | 2.திருஈங்கோய் மாலை | 55 |
| | | 3.திருவலஞ்ச்சுழி மும்மணிக்கோவை | 15 |
| | | 4.திருவெழு கூற்றிருக்கை | 1 |
| | | 5.பெருந்தேவபாணி | 1 |
| | | 6.கோபப் பிரசாதம் | 1 |
| | | 7.காரெட்டு | 8 |
| | | 8.போற்றித் திருக்கலி வெண்பா | |
| | | 9.திருமுருகாற்றுப்படை | 1 |
| | | 10. திருக்கண்ணப்ப தேவர் திருமறம் | 1 |
| | 6.கல்லாட தேவர் | திருக்கண்ணப்ப தேவர் மறம் | 1 |
| | 7.கபிலதேவர் | 1.மூத்தநாயனார் திருவிரட்டை மணிமாலை | 20 |
| | | 2.சிவபெருமான் திருவிரட்டை மணிமாலை | 37 |
| | | 3.சிவபெருமான் திருவந்தாதி | 100 |

Narumalar Deepam Academy-8122190917

| | | | |
|---|---|---|---|
| | 8.பரணதேவர் | சிவபெருமான் திருவந்தாதி | 100 |
| | 9.இளம் பெருமான் அடிகள் | சிவபெருமான் திருமும் மணிக்கோவை | 30 |
| | 10. அதிரா அடிகள் | மூத்தபிள்ளையார் திருமும் மணிக்கோவை | 20 |
| | 11.பட்டினத்து அடிகள் | 1.கோவில் நான்மணிமாலை | 42 |
| | | 2.திருக்கழுமல மும்மணிக்கோவை | 13 |
| | | 3.திருவிடைமருதூர் மும்மணிக்கோவை | 30 |
| | | 4.திருவேகம்புடையார் திருவந்தாதி | 100 |
| | | 5.திருவெற்றியூர் ஒருபா ஒருபது | 10 |
| | 12.நம்பியாண்டார் நம்பி | 1.திருநாகையூர் விநாயகர் மாலை | 20 |
| | | 2.கோயில் திருபண்ணியர் விருத்தம் | 70 |
| | | 3.திருத்தொண்டர் திருவந்தாதி | 89 |
| | | 4.ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி | 100 |
| | | 5.ஆளுடைய பிள்ளையார் திருச்சண்பை விருத்தம் | 11 |
| | | 6.ஆளுடைய பிள்ளையார் திருமும்மணிக்கோவை | 30 |
| | | 7.ஆளுடைய பிள்ளையார் திருவுலாமாலை | 1 |
| | | 8.ஆளுடைய பிள்ளையார் திருக்கலம்பகம் | 49 |
| | | 9.ஆளுடைய பிள்ளையார் திருதொழுகை | 1 |
| | | 10.திருநாவுக்கரசு தேவர் திருவேகதச மாலை | 11 |
| 12 | சேக்கிழார் | பெரியபுராணம் | 4286 |

திருஞான சம்பந்தர்: (1, 2, 3 பாடல்கள்)

- தேவாரம் = தே + வாரம்
- தே – கடவுளுக்குரிய பாடல்கள்
- தேவார பாடல்களை பழம் 'மரபிசைக் களஞ்சியம்' என்று அழைக்கலாம்.
- 'இவ்வளவு பழமையான இசைச்செல்வம் உலகில்வேறு எங்கும் இந்த அளவிற்கு கிடைக்க வில்லை' என்பார் - மு.வ.
- ஊர் - (பிரம்ம புரம், தோணி புரம்) வேணுபுரம், சீர்காழி
- அந்தணர் குலம்
- சிவபாத இருதையர் - பகவதி
- முதல் மூன்று (1,2,3) திருமுறைகளைத் தொகுத்தவர்.
- 16000 பதிகங்கள்
- தற்பொழுது 384 – பதிகங்கள்

Narumalar Deepam Academy-8122190917